1990 ஏப்ரல் 5]

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த நிலம் ஆர்ஜிதம் செய்கின்றபொழுது, மூன்றாண்டுகளுக்கு முன்னால்தான் ஆர்ஜிதம் செய்தோம். ஆனால் அப்பொழுது இருந்த நிலத்தினுடைய ரேட் வேறு ; இன்று இருக்கின்ற ரேட் வேறு. ஆகவே, பக்கத்தில் உள்ளவர்கள் அதிகமான ரேட் தருகிறேன் என்று நிலச்சுவான்தாரரைக் கேட்கிறார்கள். இப்படி ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது. ஆகவேதான், விரைவுகாட்டி அந்த மனை நிலத்திற்கு உரிய நபரிடம் தொகையை வழங்கிவிட்டு பிறகு நடவடிக்கையை அரசு எடுத்தால் பரவாயில்லை.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கூடிய விரைவில் அந்த நில உரிமையாளருக்கு தொகை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர் ஆற்றில் சாக்கடை கலப்பதைத் தடுத்தல்

*6051. டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் சாக்கடைகள் அனைத்தும் குடிநீர் பெறப்படும் ஆற்றில் கலப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) பரமக்குடியில் வைகை ஆற்றின் படுகையில் ஆங்காங்கே சில இடங்களில் கழிவுநீர் வழிந்தோடி வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) பரமக்குடியிலிருந்து சுமார் 1 கி. மீ. தூரத்திலுள்ள 'தண்டர் தேவிபட்டணம்' என்னும் கிராமத்தின் அருகில் அமைந்துள்ள கழிவுநீர்ப் பண்ணைக்கு கழிவு நீரானது மின் இயந்திரங்கள் மூலம் கழிவு நீரேற்றம் செய்யப்படுகிறது. வைகை ஆற்றில் விடப்படும் கழிவுநீர்த் தேக்கம் இருக்க வாய்ப்பில்லை. வைகை ஆற்றில் நீர் திறந்து விடப்படும்போது, தேங்கியுள்ள கழிவுநீரும் நீர்ப் போக்கில் கொண்டு செல்லப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகராட்சிக்கு பரமக்குடி அருகில் உள்ள வைகையாற்றில் இருந்துதான் குடி தண்ணீர் பெறப்படுகிறது. பெரும்பாலான கழிவு நீர், குடி நீர் பெறப்படும் வைகையாற்றில் கலக்கின்றது. குறிப்பாக, பேச்சியம்மன் படித்துறை முத்தாலம்மன் கோயில் படித்துறை, சுப்பிரமணியர் கோயில் படித்துறை, சாந்தி தியேட்டர் சந்து, ரவி தியேட்டர் சந்து ஆகிய இடங்களில் , 24 மணி நேரமும் ஆற்றில் சாக்கடை நீர் கலக்கின்றது. இதனால், மஞ்சள் காமாலை, மூளைக் காய்ச்சல் இளம் பிள்ளை வாதம், காலரா போன்ற நோய்கள் வருஷந்தோறும் பரமக்குடி மக்களை வாட்டுகின்றது. இரண்டு வருஷங்களுக்கு முன்புகூட பரமக்குடி . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, விரிவுரையா ? வினா என்ன ? நேராகச் சாக்கடைக்கு வாருங்கள் . (சிரிப்பு)

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : இரண்டு வருஷங்களுக்கு முன்புகூட, ''பரமக்குடியை உலுக்கிய மஞ்சள் காமாலை'' என்று தினத்தந்தியில் தலையங்கம் இட்டு கட்டுரை வெளிவந்தது. இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால், இது வாட்டர் பொல்யூஷன் மூலம்தான் இந்த வியாதி பரவுவதற்கு ஏதுவாக இருக்கிறது என்று மதுரையிலிருந்து நுண்ணியல் பிரிவு ஆய்வாளர் வந்து அறிக்கை கோரி உள்ளார்கள். ஆகவே, இதைத் தடுப்பதற்கு ஆற்றின் ஓரத்தில் சேனல் கட்டி, அந்தக் கழிவு நீர், குடிநீர் பெறப்படும் ஆற்றில் கலக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வைகை ஆற்றிலேயிருந்துதான் பரமக்குடிக்கான குடிநீர் எடுக்கப்படுகிறது. அந்தக் கழிவு நீரை பக்கத்திலே உள்ள கழிவு நீர்ப் பண்ணைக்கு எடுத்துச் சென்று அங்கே புல் வளர்க்கப்படுகிறது. சிலயிடங்களிலே உறுப்பினரவர்கள் சுட்டிக்காட்டி இருப்பதைப்போல கழிவு நீர் செல்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அவைகள் ஆற்றினுடைய வெள்ளக் காலங்களிலே அடித்துச் செல்லப்படுவது உண்டு. தேங்கி நிற்கின்ற இந்தக் கழிவு நீரை அகற்றுவதற்கு நகராட்சியோடு சேர்ந்து இந்த அரசும் முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மணி நேரமும் ஆற்றில் சாக்கடை நீர் கலக்கிறது என்பது முழுக்க முழுக்க உண்மை. நீங்கள் ஒரு குழு அமைத்து, மழைக் காலங்களில் ஆனாலும் சரி, கோடைக் காலங்

கவில் ஆனாலும் சரி, அதைப் பார்வையிட நேர்ந்தால், எந்த நேரமும் அதைப் பார்வையிடலாம். அவ்வாறு ஒரு குழு அமைத்து, அந்தக் குழு வந்து அதைப் பார்வையிடுமா? அவ்வாறு அந்தக் குழு பரிந்துரை செய்தால் அப்பொழுதாவது இந்தச் சாக்கடை நீர் குடிநீர் பெறப்படும் தண்ணீரில் கலக்காமல், வாட்டர் பொல்யூஷன் ஏற்படாமல் இருப்பதற்கு அரசு முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவரவர்களே, உறுப்பினருடைய கருத்துக்களை அரசு கருத்தில் எடுத்துக் கொள்ளும்.

லிக்கோடெர்மாவுக்கு மருத்துவம்.

* 9026 திரு. செங்கை சிவம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) லிக்கோடெர்மா வில் டிலில் என்னும் சருமநோய் தாக்கியுள்ளவர்கள் நிவாரண மருந்தான மெல்ஜினினா லோஷனை அதிக விலையில் வாங்க முடியாமல் உள்ளது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இம்மருந்தினை உள்ளூரில் தயாரிக்கவும் நியாயமான விலையில் விற்கவும் அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம், இந்த மருந்து இச்சரும நோய்க்கு முழுமையான பலனளிக்கக்கூடிய மருந்தாக அமையவில்லை. மேலும் இந்த மருந்தின் தொழில் நுட்ப விவரங்கள் சரிவரக் கிடைக்காத காரணத்தினால் இந்த மருந்தினை இந்தியாவில் தயாரிக்க முடியாமல் உள்ளது. எனினும் இதற்குச் சமமாக பலனளிக்கக்கூடிய மாற்று மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதிலும் மிகவும் குறைந்த விலையில் கிடைக்கின்றன.

9-55 மணி

திரு. செங்கைசிவம்: தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள ராம் மனோகர் லோகியோ மருத்துவமனையின் தலைமை மருத்துவர் டாக்டர் பேராசிரியர் எஸ்.கே. சர்மா 18-9-1989 ஆம் நாளன்று 'பைனான்சியல் எக்ஸ்பிரஸ்' என்ற பத்திரிகைக்கு அளித்து இருக்கிற பேட்டியில் 'லிக்கோடெர்மா' வியாதிக்கு கியூபா நாட்டில் மருந்து தயாரிக்கப்படுகிறது என்றும், 'மெல்ஜினினா' என்ற மருந்து தான் சிறந்தது என்றும், அதில் 100-ல்